# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 096 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 05.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# எல்பிஜி நெருக்கடிக்கு 7 நாட்களில் தீர்வு காணப்பட்டது

## பிரதமர் நரேந்திர மோடி பேச்சு



எல்பிஜி நெருக்கடிக்கு 7 நாட்களில் தீர்வு காணப்பட்டதாக பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் ரூ.1 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து பிரதமர் மோடி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

மேற்கு ஆசியாவில் ஏற்பட்ட போர் 21ம் நூற்றாண்டில்மிகப்பெரிய எரிசக்தி நெருக்கடியை உருவாக்கியது.

கடின உழைப்பு, முயற்சி, பொறுமை, ராஜதந்திர நடவடிக்கைகளால் எரிசக்தி நெருக்கடியை முறியடித்தோம்.

எண்ணெய் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட இழப்பை அரசாங்கம் வழங்கியது. பாஜக அரசு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிவிட்டு அப்படியே விட்டுவி டுவதில்லை.

அடிக்கல் நாட்டிய திட்டங்கள் நிறைவடைவதை உறுதி செய்ய நாங்கள் இரவும்,பகலும்உழைக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

ஜோத்பூர் விமான நிலையம்

பிரதமர் மோடி இன்று ராஜஸ்தான் மாநிலம் சென்றார். அங்கு அவர் ஜோத்பூர் விமான நிலையத்தின் புதிய முனையத்தை திறந்து வைத்தார். அத்துடன் பார்மர் மாவட்டம் பச்பத்ராவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை திறந்து வைத்து நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

பிரதமர் திறந்து வைக்க இருக்கும் ஜோத்பூர் விமான நிலையத்தின் புதிய முனையத்தை அம்மாநில முதல்வர் பஜன்லால் சர்மா நேற்று ஆய்வு செய்தார். இந்நிலையில், பிரதமர் மோடி இன்று திறந்து வைத்தார்.

அத்துடன் நீண்ட காலமாககாத்திருக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும்திறந்துவைத்தார். இது மாநிலத்திற்கு மிகப்பெரிய மைல்கல் என பிரதமர் மோடி தெரிவித்தார்.

ஜோத்பூர் விமான நிலையத்தின் புதிய முனையம் 29 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. நாட்டின சாதாரண குடிமகனும் விமானத்தில் பயணிக்கட்டும்என்றஉடான் திட்டத்தின் கீழ் இந்த முனையம் கட்டப்பட்டுள்ளது.

இந்த விழாவில் ஆளுநர் ஹரிபாவ் கிசன்ரவா் பாக்டே, மத்திய விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் கிஞ்சராபு ராம்மோகன் நாயுடு, கஜேந்திர சிங் ஷெகாவத், முரளிதர் மோஹோல் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

# தவெக அரசு, அமைச்சர்கள் மீது அடுக்கடுக்கான புகார்கள்

## ஆளுநரிடம் மனு அளித்த நயினார் நாகேந்திரன்



சென்னை: "தவெக அமைச்சர்கள் பலரின் மீது குற்றச்சாட்டுகள் உள்ளது. ஆளும் கட்சி தரப்பினர் மீது பல்வேறு புகார்கள் வந்துகொண்டே இருக்கிறது. அரசு வழக்கறிஞரை நியமிக்க ரூ.5 லட்சம் முதல் 50 லட்சம் வரை அமைச்சர் நிர்மல் குமார் லஞ்சம் கேட்பதாக புகார் வந்துள்ளது" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் அர்லேகரை தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் இன்று சந்தித்துப் பேசினார். அப்போது பாஜக மேலிட பொறுப்பாளர் அரவிந்த் மேனன், மூத்த நிர்வாகி நாராயணன் திருப்பதி ஆகியோர் உடன் இருந்தனர். இந்தச் சந்திப்பின்போது தமிழகத்தின் தற்போதைய சட்டம் - ஒழுங்கு பிரச்சினை தொடர்பாக மனு அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய நயினார் நாகேந்திரன், "உயர் கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன், குழந்தைகளிடம் நடந்துகொண்ட முறை,தவெக அமைச்சரவை கூட்டத்தில் தனி நபர்களான விஷ்ணு ரெட்டியும், ஜான் ஆரோக்கியசாமியும் கலந்து கொண்டது குறித்து நடவடிக்கை எடுக்க ஆளுநரிடம் மனு கொடுத்துள்ளோம்.

தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற 54 நாட்களில் 151 பாலியல் வன்கொடுமைகள், 85-க்கும் மேற்பட்ட படுகொலைகள், 80-க்கும் மேற்பட்ட போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் நடந்துள்ளன. கடந்த கால திமுக அரசுக்கும், இப்போதைய தவெக அரசுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. இதில் முதல்வர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது குறித்து மனுவில் தெரிவித்துள்ளோம்.

உடனடியாக எல்லாவற்றையும் சரி செய்ய வேண்டும்என சொல்லவில்லை. தவெகவினரே பாலியல் தொந்தரவுகள் உள்ளிட்ட பல குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். அதன் மீது நடவடிக்கை எதுவும் இல்லை. எல்லாவற்றுக்கும் வெள்ளை அறிக்கை கொடுக்கும்தவெகஅரசு, தமிழக சட்டம் - ஒழுங்கு நிலைமை, அதற்காக எடுத்த நடவடிக்கைகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். தவெக அரசு குதிரை பேரத்தில் ஈடுபடுவதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஆட்சி பொறுப்பை ஏற்கும் முன்னரே அமமுக எம்எல்ஏ காமராஜை குதிரை பேரம் மூலம் தங்கள் பக்கம் இணைத்தனர். இப்போது தொடர்ந்து எல்லா எம்எல்ஏக்களும் தவெக பக்கம் சென்றுகொண்டுள்ளனர். ஆட்சி அமைந்து 54 நாட்களில் இடைத்தேர்தல் வர அவசியமே இல்லை.

தவெக அமைச்சர்கள் பலரின் மீது குற்றச்சாட்டுகள் உள்ளது. ஆளும் கட்சி தரப்பினர் மீது பல்வேறு புகார்கள் வந்துகொண்டே இருக்கிறது. ஆனால்,இதில் முதல்வர் நடவடிக்கை எடுக்கவில்லை. அமைச்சர் நிர்மல் குமார் சட்டம் படித்துள்ளாரே தவிர, அவருக்கு சட்டம் பற்றி தெரியுமா எனத் தெரியவில்லை. திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்ற மாட்டோம் என அமைச்சர் நிர்மல் குமார் கூறியுள்ளார். நீதிமன்றம் தீபம் ஏற்ற வேண்டும் என உத்தரவிட்ட பின்னும், முடியாது என சொல்லும் இவர் எப்படி சட்டத்துறை அமைச்சராக நீடிக்கிறார்.

ஆய்வு செய்ய ஆளுநருக்கு உரிமை இல்லை என அமைச்சர் நிர்மல் குமார் சொல்லியுள்ளார். அரசியலமைப்பு சட்டம் 167-ன்படி ஆளுநர் மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் அவர் செல்லும் இடங்களில் ஆய்வு செய்ய உரிமை உள்ளது.

தமிழக அரசின் அதிகாரத்தை எடுத்துக்கொள்ள ஆளுநர் விரும்பவில்லை. அரசு தயாரித்து கொடுத்த உரையை அப்படியே சட்டப்பேரவையில் வாசித்தது இதே ஆளுநர் தான். இந்த அரசுக்கு ஆளுநர் முழு ஒத்துழைப்பு தரும் போது, அவரை கொச்சைப்படுத்துவது அமைச்சருக்கு அழகல்ல.

அரசு வழக்கறிஞரை நியமிக்க ரூ.5 லட்சம் முதல் 25 லட்சம் வரை அமைச்சர் நிர்மல் குமார் லஞ்சம் கேட்பதாக புகார் வந்துள்ளது" எனத் தெரிவித்தார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க சதி? செந்தில் பாலாஜி, அசோக்குமாருக்கு லுக் அவுட் நோட்டீஸ்



தமிழகத்தில் நடைபெற்று வரும் த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க,அக்கட்சி எம்.எல்.ஏ.க்களிடம் தி.மு.க. தரப்பில் பேரம் பேசப்பட்டதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகின. இது தொடர்பாக, ஊத்தங்கரை தொகுதி த.வெ.க.எம்.எல்.ஏ.டாக்டர் இளையராஜா,சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலத்தில் புகார் அளித்தார்.

அந்த புகார் மனுவில், த.வெ.க.அரசை கவிழ்க்க தன்னிடம் ரூ.35 கோடி பேரம் பேசியதாக கூறியிருந்தார். இந்த நிலையில், அவர் கூறிய தகவல்களின் அடிப்படையில், ஐ.பி.டி.எஸ். என்ற தேர்தல் கருத்து கணிப்பு நிறுவனத்தின் நிறுவனர் திருநாவுக்கரசு, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளர்களான சென்னை மேடவாக்கத்தை சேர்ந்த தியாகராஜன், பெசன்ட் நகரை சேர்ந்த நரேஷ், கரூரை சேர்ந்த ரமேஷ், கார்த்தி, சென்னை பள்ளிக்கரணையை சேர்ந்த செல்வன், மணப்பாக்கத்தை சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் சீனிவாசன், அஸ்தினாபுரத்தை சேர்ந்த ராஜேஷ் ஆகிய 8 பேரை போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடம் போலீசார் நடத்திய விசாரணையில், த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க அக்கட்சி எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்க ரூ.180 கோடியில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக பரபரப்பு வாக்குமூலம் அளித்தனர்.

பூர்வீக வீட்டில் சம்மன்

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது சகோதரர் அசோக்குமார் ஆகியோரை விசாரணைக்கு ஆஜராக சென்னை போலீசார் இன்று கரூர் மாவட்டம் ராமேஸ்வரபட்டியில் உள்ள அவரது பூர்வீக வீட்டில் சம்மன் அளித்தனர். இந்த சம்மனை செந்தில் பாலாஜியின் தந்தை பெற்றுக்கொண்டார். வரும் திங்கட்கிழமை,அதாவது ஜூலை6-ந்தேதி ஆஜராகுமாறு அந்த சம்மனில் கூறப்பட்டிருந்தது.

லுக் அவுட் நோட்டீஸ்

இந்நிலையில் த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க பேர நடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக் குமாருக்கு லுக் அவுட் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.இதனிடையே செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக் குமார் ஆகியோர் தலைமறைவாக உள்ளதாக திருவல்லிக்கேணி போலீஸ் தகவல் தெரிவித்துள்ளனர்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தமிழ்நாடு ஆசிரியர் தகுதித்தேர்வு (TNTET) தாள்1

## பள்ளிக் கல்வித்துறை இணை இயக்குநர் மு. இராமசாமி

## ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மான்விழி ஆகியோர் ஆய்வு செய்தனர்

ஈரோடு மாவட்டம், கலைமகள் கல்வி நிலையம் தேர்வு மையத்தில் நேற்று (04.07.2026) நடைபெற்ற தமிழ்நாடு ஆசிரியர் தகுதித்தேர்வு (TNTET) தாள்-1 மற்றும் தாள்-2 தேர்வுகள் நேற்று (04.07.2026) மற்றும் இன்று (05.07.2026) நடைபெறுகின்றன. இத்தேர்வுகளை சிறப்பாக நடத்- மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் 26 முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 26 துறை அலுவலர்கள் மற்றும் 300-க்கும் மேற்பட்ட



TET) தாள்-1 தேர்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) முனைவர் மு. இராமசாமி மற்றும் ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் மான்விழி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர் அவர்கள் தெரிவித்ததாவது:

ஈரோடு மாவட்டத்தில் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் தற்போது பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கான தமிழ்நாடு ஆசிரியர் தகுதித்தேர்வு நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் பள்ளிக் கல்வித்துறை மற்றும் ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் மேற்கொண்டுள்ளது. தாள்-1 தேர்வு ஈரோடு மாவட்டத்தில் 6 தேர்வு மையங்களில் நடைபெற்று வருகிறது. இதில் 1,876 தேர்வர்கள் தேர்வு எழுதுகின்றனர். தாள்-2 தேர்வு நாளை 20 தேர்வு மையங்களில் நடைபெறவுள்ளது. இதில் 5,311 தேர்வர்கள் தேர்வு எழுதவுள்ளனர்.

தேர்வுகள் எவ்வித இடையூறும் இன்றி, விதிமுறைகளின்படி நடைபெறுவதற்காக அறைக் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அனைத்து தேர்வு மையங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள், குடிநீர், மின்சார வசதி, மருத்துவ உதவி உள்ளிட்ட தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக செய்யப்பட்டுள்ளன. ஆசிரியர் தகுதித்தேர்வுகள் எவ்வித இடையூறுமின்றி, நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடைபெறுவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் உள்ள தனியார் நிறுவனங்களில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ச.கீர்த்தனா , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி ஆகியோர் நேற்று (03.07.2026) ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர். திரு.ராஜ் குமார், சிப்காட் செயற்பொறியாளர் திரு. பசுபதி, சிப்காட் திட்ட அலுவலர் செல்வி. சுஜா பிரியதர்ஷினி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை, சமூகநீதி பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் விடுதியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வே.சம்பத்குமார் (3.7.2026) அன்று ஆய்வு மேற்கொண்டார்.



தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கற்குடி ஊராட்சியில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் 2025 2026 இன் கீழ் ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# தமிழகம் முழுவதும் 41 உள்ளாட்சி அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை

## தென்காசி நகராட்சி அலுவலகத்தில் ரூ.43,160 கணக்கில் வராத பணம் பறிமுதல்



தமிழகம் முழுவதும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் உள்ளிட்ட 41 இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் ஒரே நேரத்தில் அதிரடி சோதனை நடத்தினர். இந்த சோதனையில் கணக்கில் வராத ரொக்கப் பணம் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மூலம் மொத்தம் ரூ.58 லட்சம் கண்டறியப்பட்டது.

அரசு சேவைகளுக்காக லஞ்சம் பெறப்படுவதாகவும், பணம் வழங்காதவர்களின் கோப்புகள் தாமதப்படுத்தப்படுவதாகவும் வந்த புகார்களின் அடிப்படையில், லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர் மற்றும் கூடுதல் டிஜிபி அருண் உத்தரவின் பேரில் 50-க்கும் மேற்பட்ட தனிப்படைகள் இந்த சோதனையில் ஈடுபட்டன.

தென்காசி நகராட்சி அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் வராத ரூ.43,160 ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், 'ஜிபே' உள்ளிட்ட டிஜிட்டல் பரிவர்த்தனைகள் தொடர்பான ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பரிவர்த்தனைகள் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# ஆற்காடு அருகே 60 வயது மூதாட்டிக்கு பாலியல் வன்கொடுமை: கஞ்சா போதையில் இளைஞர் கைது



ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு அருகே வீட்டில் தனியாக வசித்து வந்த 60 வயது மூதாட்டியை மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்ததாக 23 வயது இளைஞர் கைது செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

போலீசார் தெரிவித்ததாவது:

வேலூர் மாவட்டம், காட்பாடி பகுதியைச் சேர்ந்த 60 வயது பெண், தனது மகளுக்கு திருமணம் செய்து வைத்த பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆற்காடு அருகே உள்ள ஒரு கிராமத்தில் வீடு கட்டி தனியாக வசித்து வந்தார்.

இந்த நிலையில், நேற்று அதிகாலை கஞ்சா போதையில் அவரது வீட்டிற்கு வந்த இளைஞர் கதவைத் தட்டியுள்ளார். மூதாட்டி கதவைத் திறந்தவுடன், அவரது வாயை துணியால் பொத்தி வீட்டுக்குள் தள்ளிச் சென்று பாலியல் வன்கொடுமை செய்ததாகவும், இதுகுறித்து வெளியில் கூறினால் கொலை செய்து விடுவதாக மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து தகவல் கிடைத்ததும், ஆற்காடு தாலுகா போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். பின்னர் பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவப் பரிசோதனைக்காக வாலாஜாபேட்டை அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து, காவல் ஆய்வாளர் ரமேஷ் தலைமையிலான போலீசார் மேற்கொண்ட விசாரணையில், குற்றச்செயலில் ஈடுபட்டவர் ஆற்காடு அருகே அத்திதாங்கல் கிராமத்தைச் சேர்ந்த தக்ஷிணாமூர்த்தி (23) என்பது தெரியவந்தது.

இதையடுத்து, அவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர். பின்னர் ராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

60 வயது மூதாட்டியிடம் இவ்வாறு பாலியல் வன்கொடுமை நடைபெற்ற சம்பவம் ஆற்காடு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# பெரியபிள்ளைவளசையில் இந்தியா பல் மருத்துவ சங்கம், தென்காசி கிளை சார்பில் பல் மருத்துவ பரிசோதனை சிறப்பு முகாம்



தென்காசி, பெரியபிள்ளைவளசையில் உள்ள விஸ்வரக்ஷா முதியோர் இல்லத்தில் மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு, இந்தியா பல் மருத்துவ சங்கம், தென்காசி கிளை சார்பில் பல் மருத்துவ பரிசோதனை சிறப்பு முகாம் நடைபற்றது

இம்முகாமில் நிறுவனர் ஒய்வு பெற்ற சுகாதார ஆய்வாளர். கந்தசாமி கலந்து கொண்டு சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்த இம்முகாமில் முதியோர்கள், பொதுமக்கள், பள்ளி குழந்தைகளுக்கு முழுமையான பல் பரிசோதனை, வாய் சுகாதார விழிப்புணர்வு, மற்றும் பராமரிப்பு ஆலோசனைகள், மாதிரி பற்பசை, மாத்திரைகள் மற்றும் பிற வாய் பராமரிப்பு பொருட்கள் வழங்கப்பட்டது

பல் முகாமில் நிர்வாக இயக்குனர் மருத்துவர் சுகன்யா, விஸ்வம் பௌண்டாஷன்

நிர்வாகிகள் சண்முகம், விஜயலக்ஷ்மி சங்க தலைவர்.

மருத்துவர் கலந்தர் மஸ்தான், செயலாளர் மருத்துவர் செய்யது முஹமத் தமீம், மற்றும் மருத்துவர்கள் மதிமாறன், காளிதாசன், ரதியா, வீனாராம், வசந்த், ஸ்டான்லி புஷ்பா ராஜ். உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவாக பல் மருத்துவ சங்க தலைவர்.

மருத்துவர் கலந்தர் மஸ்தான் நன்றியுரை வழங்கினார்

# வன மகா உற்சவத்தை முன்னிட்டு கோவர்தன் பவுண்டேசன் சார்பில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி



தென்காசி அருகே கொடிக்குறிச்சி ஊராட்சியில் உள்ள திடக்கழிவு மேலாண்மைபூங்காவில், வன மகா உற்சவத்தை முன்னிட்டு கோவர்தன் பவுண்டேசன் சார்பில், தென்காசி மாவட்ட வனத் துறையின் ஒத்துழைப்புடன் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளர்களாக உதவி வன பாதுகாவலர் நெல்லை நாயகம், வனவர் சங்கர் ராஜா, ஓய்வு பெற்ற வனத்துறை அதிகாரி ராஜ குலசேகர பாண்டியன், கொடிக்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர் தெட்சிணாமூர்த்தி மற்றும் இயற்கை ஆர்வலர் சு மு. முருகன் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

கோவர்தன் பவுண்டேசன் தன்னார்வலர்களான முத்துச்செல்வம், குமார், கருப்பசாமி, யுவராஜ்குமார், இசக்கிராஜ் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்று மரக்கன்றுகள் நடும் பணியில் ஈடுபட்டனர். இந்த நிகழ்ச்சியில் கோவர்தன் பவுண்டேசன் தன்னார்வலர்களான முத்துச்செல்வம், குமார், கருப்பசாமி, யுவராஜ்குமார், இசக்கிராஜ் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்று மரக்கன்றுகள் நடும் பணியில் ஈடுபட்டனர்.

## ஆவுடையார் கோவில் அருகே

# மீண்டும் மஞ்சபை விழிப்புணர்வு மரக்கன்று வழங்கும் விழா



புதுக்கோட்டை மாவட்டம் அமரடக்கி புன்னகை அறக்கட்டளையின் நிர்வாகி காட்டுமன்னார்கோவில் சிறந்த சமூக சேவகர் திரு.மணிவேல் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் ஒன்றியம் அமரடக்கி ஹோலிகிராஸ் பள்ளியின் தாளாளர் திரு.சேசுராஜ் தலைமையில் புன்னகை அறக்கட்டளை நிறுவனர் ஆ. சே.கலைபிரபு முன்னிலையில் மாணவ மாணவிகளுக்கு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக மரங்கள் வளர்க்க வேண்டும், நெகிழி தவிர்க்கவேண்டும் என்பதை உணர்த்தி குழந்தைகளுக்கு மரக்கன்றுகள் வழங்கி மீண்டும் மஞ்சபை விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது

இதில் புன்னகை அறக்கட்டளையின் நிர்வாகிகள் திரு. அய்யப்பன், திரு. பாஸ்கரன், திரு. தளபதி முனிஷ் திரு. இருதயராஜ் ,திரு.செல்வம் மற்றும் இருபால ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# கோவை அருகே 60 டன் யூரியா உர மூட்டைகள் பறிமுதல்



கோவை:

திருமலையாம்பாளையம் அருகே சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த 60 டன் யூரியா உர மூட்டைகள் பறிமுதல் செய்தனர். உள்ளூர் விவசாயிகள் அளித்த புகாரின் பேரில் பிளைவுட் தொழிற்சாலை யில் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். உரத்தட்டுப்பாடு உள்ள நிலையில் ஒன்றிய அரசு மானியத்துடன் வழங்கும் உர மூட்டைகள் பதுக்கல் என குற்றம் சாட்டியுள்ளனர். கர்நாடகாவில் இருந்து கேரளாவுக்கு உர மூட்டைகள் அனுப்ப திட்டமிட்டது விசாரணையில் தெரியவந்து உள்ளது.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழிற்பூங்காவில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ச.கீர்த்தனா கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி ஆகியோர் தலைமையில் (03.07.2026) அன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர். ராஜ்குமார், சிப்காட் செயற்பொறியாளர் பசுபதி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், பாரியூர்,அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில் மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் பகுதிகளில் உள்ள ஒருகால பூஜை திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்களை திருக்கோவில் பூசாரிகள் மற்றும் அர்ச்சகர்களிடம் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நேற்று (4.7.2026) வழங்கினார்.

## தூத்துக்குடி மீன்பிடி துறைமுக திட்ட கோட்ட செயற்பொறியாளர் க. கணபதி ரமேஷ் பணிநிறைவு: அதிகாரிகள், பணியாளர்கள் வாழ்த்து



தமிழ்நாடுமீன்வளத்துறையில் தூத்துக்குடி மீன்பிடி துறைமுக திட்ட கோட்ட செயற்பொறியாளராகப் பணியாற்றி வந்த கணபதி ரமேஷ் கடந்த 30.06.2026 அன்று தனது அரசுப் பணியிலிருந்து நிறைவு பெற்று ஓய்வு பெற்றார்.

இதனை முன்னிட்டு, அவருக்குப் பாராட்டு மற்றும் வாழ்த்துத் தெரிவிக்கும் நிகழ்ச்சி பெல் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில், தூத்துக்குடி மீன்பிடி துறைமுக திட்ட கோட்டம் மற்றும் உபகோட்ட அதிகாரிகள், பணியாளர்கள், மற்றும் தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத்தலைவர் இசக்கிமுத்து மற்றும் முத்தரையர் கனவா மீன்பிடி நலசங்க பொருளாளர் எஸ்.ஆர்.சந்தனராஜ் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துப் பதாகை வழங்கி தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் உதவி செயற்பொறியாளர் ஜே.செந்தில்குமார், உதவி பொறியாளர் தே.வள்ளி, மீன்வளம் மற்றும் மீனவர் (மண்டலம்) நலத்துறை இணை இயக்குநர் இளம்வழுதி, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்கு நர்புஷ்ரா ஷப்னம் மற்றும் அரசு அலுவலர்கள் பணியாளர்கள் சங்குகுளி இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## முத்துக்கடை பேருந்து நிலையத்தில் ஆம்ஸ்ட்ராங்கின் 2ஆம் ஆண்டு நினைவேந்தல்: பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி மரியாதை





ராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்து நிலையத்தில்,தமிழ்நாடு மாநில பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் சமத்துவ தலைவர் ஆம்ஸ்ட்ராங்கின் 2ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை மாவட்டத் தலைவர் சுமன், நகர செயலாளர் பாக்யராஜ், மாவட்டத் துணைத் தலைவர் பாலமுருகன் மற்றும் பொறியாளர் அணி மாவட்ட செயலாளர் இன்பரசன் ஆகியோர்ஏற்பாடுசெய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் ராணிப்பேட்டை புரட்சி குணா சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு,அலங்கரிக்கப்பட்ட ஆம்ஸ்ட்ராங்கின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்டத் துணைத் தலைவர் பாலமுருகன், ராஜன், ஜெயராஜ், குபேந்திரன், சரண்ராஜ், காமேஷ் குமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியின் நிறைவில் மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் ஜெயராஜ் நன்றி கூறினார்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், பாரியூர்,அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில் மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் பகுதிகளில் உள்ள ஒருகால பூஜை திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்களை திருக்கோவில் பூசாரிகள் மற்றும் அர்ச்சகர்களிடம் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நேற்று (4.7.2026) வழங்கினார்.

## கோவையில் டொயோட்டாவின் முழு மின்சார அர்பன் க்ரூயிசர் இபெல்லா அறிமுகம் ஹைரைடர் ஆனைமலைஸ் லிமிடெட் எடிஷனும் வெளியீடு



கோவை சாய்பாபா காலனியில் உள்ள ஆனைமலைஸ் டொயோட்டா ஷோரூமில், டொயோட்டாவின் புதிய முழு மின்சார எஸ்யூவி அர்பன் க்ரூயிசர் இபெல்லா (*Urban Cruiser EBELLA*) கார் அறிமுக விழா நடைபெற்றது.

இதனுடன் ஹைரைடர் ஆனைமலைஸ் லிமிடெட் எடிஷன் காரும் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் வாடிக்கையாளர்கள், வங்கி அதிகாரிகள், ஷோரூம் ஊழியர்கள் மற்றும் ஆட்டோமொபைல் துறையைச்சேர்ந்த பலர் கலந்து கொண்டு புதிய மாடல்களை பார்வையிட்டனர். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஐசர் விற்பனைப் பிரிவு துணைத்தலைவர்ராஜன் ஆறுமுகம், தலைமை நிலைய நிர்வாகிகள் முரளிதரன் மற்றும் தரணிகுமார் ஆகியோர் கலந்து கொண்டு புதிய வாகனங்களை அறிமுகப்படுத்தினர்.

நிகழ்ச்சியில் பேசிய அவர்கள், சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார வாகனங்களுக்கான வரவேற்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், டொயோட்டாவின் புதிய அர்பன் க்ரூயிசர் இபெல்லா வாடிக்கையாளர்களுக்கு நவீன தொழில்நுட்பம், பாதுகாப்பு வசதிகள் மற்றும் சிறந்த செயல்திறனை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும், ஹைரைடர் ஆனைமலைஸ் லிமிடெட் எடிஷன் மாடல் காரும் வாடிக்கையாளர்களின் கவனம் ஈர்க்கும் எனக்குறிப்பிட்டனர்.

புதிய வாகனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதைத்தொடர்ந்து,வாடிக்கையாளர்கள் அவற்றை ஆர்வமுடன் பார்வையிட்டு, அதன் சிறப்பம்சங்கள் குறித்து நிறுவன அதிகாரிகளிடம் விளக்கம் பெற்றனர்.

## தேசிய அளவிலான டேக்வாண்டோ போட்டி 28 தங்கம் உட்பட 55 பதக்கங்கள் வென்று கோவை ஆண்ட்லீ டேக்வாண்டோ கிளப் மாணவர்கள் அசத்தல்

### டேக்வாண்டோ விளையாட்டில் சாதிக்க உறுதுணையாக இருந்த தமிழ்நாடு மாநில மாவட்ட டேக்வாண்டோ சங்கத்திற்கு நன்றி தெரிவித்து தலைமை பயிற்சியாளர் ஆனந்த் நெகிழ்ச்சி




சேலத்தில் தமிழ்நாடு டேக்வாண்டோ சங்கம் சார்பில் 14-வது தேசிய அளவிலான ஓபன் டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது..

பல்வேறு மாநிலங்களை சேர்ந்த வீரர்,வீராங்கனைகள் கலந்து கொண்ட இதில்,தமிழக அணி சார்பாக கோவையைச் சேர்ந்த ஆண்ட்லீ பிளாக் பெல்ட் அகாடமியில் பயிற்சிபெறும் அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ, மாணவிகள் 18 பேர் பங்கு பெற்றனர்..

சிறுவர்கள் துவங்கி,சப் ஜூனியர்,கேடட்,ஜூனியர்,சீனியர் என பல்வேறு பிரிவுகளில் பூம்சே,கிரோகி என ஆகியபிரிவுகளாகநடைபெற்ற போட்டிகளில், கோவையை சேர்ந்த மாணவர்கள் அபார திறமையை வெளிப்படுத்தி 28 தங்கம், 15 வெள்ளி, 12 வெண்கலம் என மொத்தம் 55 பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர்.

இந்நிலையில்,தேசிய போட்டியில் பதக்கம் வென்று கோவை திரும்பிய வீரர்,வீராங்கனைகளுக்கு பெற்றோர், பயிற்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் சார்பில் , மலர்மாலை அணிவித்து மேள தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது..

தேசிய போட்டியில் வெற்றி பெற்ற இந்த மாணவ, மாணவிகள் அடுத்ததாக தென்கொரியாவில் நடைபெற உள்ள சர்வதேச டேக்வாண்டோ போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

இதுகுறித்து ஆண்ட்லீ பிளாக் பெல்ட் அகாடமியின் தலைமை பயிற்சியாளர் ஆனந்த் செய்தியாளர்களிடம் கூறுகையில், தமிழகத்தில் டேக்வாண்டோ போட்டியில் மாணவர்கள் சாதிக்க ஊக்கமளித்து வரும்,தமிழ்நாடு டேக்வாண்டோ சங்கத்தின்,மாநிலபொதுசெயலாளர் செல்வமணி, கோவை மாவட்ட பொது செயலாளர் சிஜு குமார், ஆகியோருக்கு முதலில் நன்றிகளை தெரிவிப்பதாக கூறினார்..

டேக்வாண்டோ போன்ற தற்காப்புக் கலை விளையாட்டுகளில் திறமையான வீரர், வீராங்கனைகள் தமிழகத்தில் ஏராளமாக உள்ளதாக கூறிய அவர்,

அவர்களின் திறமையை உலக அரங்கில் வெளிப்படுத்த தமிழக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என கேட்டு கொண்டார்..

இந்நிகழ்ச்சியில்,பயிற்சியாளர்கள், கல்யாண சுந்தரம்,சலீம், மற்றும், ஆன்டலி அகாடமி பயிற்சியாளர்கள் அபிஷேக்டிவின் சிங்கத்தமிழன், சுபாஷ் சஞ்சய் உட்பட வெற்றி பெற்ற மாணவ,மாணவிகளின் பெற்றோர்கள் ஆகியோர்,உடன் இருந்தனர்.

### தமிழக முதல்வர் குறித்து அவதூறு பேசியதாக கைது செய்யப்பட்ட

# திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் திமுக அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் ஜாமீன் வழங்கிய நீதிமன்றம்



முதலமைச்சர் குறித்துப் பொதுவெளியில் அவதூறாகப் பேசியதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில், திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் நேற்று (ஜூலை 3) காவல் துறையினரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து, அவருக்குத்தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விரிவான மருத்துவப் பரிசோதனைகள் செய்து முடிக்கப்பட்டன.

அதை தொடர்ந்து திருச்செந்தூர் நீதிமன்ற நீதிபதி சிதம்பரம் முன்னிலையில் ஆஜரானார் அரசு தரப்பு மற்றும் அனிதா ராதாகிருஷ்ணன் தரப்பு என இரு தரப்பினரும் காரசாரமாக சுமார் ஒன்றரை மணிநேரத்திற்குமேலாக வாதிட்டனர்.

நீதிபதி அவருக்கு சொந்த ஜாமீன் வழங்கியதோடு ரூபாய் 10,000 அபராதம் விதித்தார். அதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டகாவல்நிலையத்தில் பத்து நாட்கள் அவர் கையெழுத்திட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தார்.

அதைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணனுக்கு ஜாமீன் வழங்கி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதையடுத்து வெளியே வந்த அனிதா ராதாகிருஷ்ணன் நீதி வென்றதாக செய்தியாளர்களிடம்தெரிவித்தார்.

அதை தொடர்ந்து அவர் சொந்த காரில் ஏறி கிளம்பி அவருக்கு கட்சியினர் உற்சாக வரவேற்பும் அளித்தனர்.

இடையில் நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கில் வழக்கறிஞர் மற்றும் அனிதா ராதாகிருஷ்ணன் தரப்பு வழக்கறிஞர் இருவருக்கும் இடையே காரசார விவாதம் நடந்தது அப்போது, அவரது உடல்நிலை கருத்தில் கொண்டு, 41 விதிமுறை முறையாக பின்பற்றப்படவில்லை.

முதல் முறை சமன் கொடுக்கப்பட்ட நிலையில் அவர் வாங்கவில்லை. இரண்டாவது முறை சமன் கொடுக்கப்பட்ட நிலையில் வழக்கறிஞர் மூலம் பதில் அளித்து இருந்தார்.

இந்த நிலையில் அவசர அவசரமாகஏன்கைது செய்ய வேண்டும் என அவர் தரப்பு வழக்கறிஞர் வாதம் செய்தார்கள். நீதிமன்ற வளாகத்திற்குள் எந்த சத்தமும் பிரச்சனையும் இருக்கக் கூடாது ஏற்படக்கூடாது என நீதிபதி அறிவுரை அனுப்பி வைத்தார்.

ஏற்கனவே அவருக்கு சமன் கொடுக்கப்பட்டது அவர் அதை பெற்றுக்கொள்ளவில்லை. இரண்டாவது முறை சமன் கொடுக்கப்பட்ட நிலையில் வழக்கறிஞர் மூலம்

ஜூலை 10ஆம் தேதி ஆஜராகுவதாக தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சட்ட ஒழுங்கு பிரச்சினை கருத்தில் கொண்டு தான் முன்னெச்சரிக்கையாக இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது .

அனிதா ராதாகிருஷ்ணன் தரப்பு வழக்கறிஞர் வாதம், கைது செய்யப்பட்டது உரிய விதிமுறை பின்பற்றப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர் அவர் பொதுவெளியில் செல்வதால் என்ன சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்பட போகிறது. பத்தாம் தேதி ஆஜராக தெரிவித்திருந்த நிகழ்வும் அவசர அவசரமாக இன்று காலை ஜாமின் தள்ளுபடி ஆனதை தொடர்ந்து இந்த கைது நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். கைது செய்யப்பட்டதே தவறானது என வாதிட்டனர்.இந்தவாதம் நள்ளிரவை கடந்து நடைபெற்றது.



தென்காசி மாவட்டம், பண்பொழி பேரூராட்சியில் இன்று 3.7.2026 மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், மூலதன மானிய நிதி (2024, 2025) இன் கீழ் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேரூராட்சி அலுவலகக் கட்டடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# திரிணமூல் காங். மாநில தலைவராக நியமிக்கப்பட்ட ஒரே மாதத்தில் சந்த்ரிமா பட்டாச்சார்யா ராஜினாமா



கொல்கத்தா: திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மேற்கு வங்க மாநில தலைவரும், மம்தா பானர்ஜியின் நெருங்கிய தோழியுமான சந்த்ரிமா பட்டாச்சார்யா மாநில தலைவர் உட்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகுவதாக அறிவித்துள்ளார்.

திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவராக பதவி வகித்து வந்த கட்சியின் மூத்த தலைவர் சுப்ரதா பக்ஷி, உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டதை அடுத்து அந்தப் பதவிக்கு கடந்த ஜூன் 3-ம் தேதி சந்த்ரிமா பட்டாச்சார்யா நியமிக்கப்பட்டார். மம்தா பானர்ஜியின் நெருக்கிய தோழியான இவர், மம்தா பானர்ஜி தலைமையிலான அரசில் நிதி, சுகாதாரம்,பஞ்சாயத்து, ஊரக வளர்ச்சி ஆகிய துறைகளுக்கான அமைச்சராக பதவி வகித்தவர்.

தனது ராஜினமா குறித்து மம்தா பானர்ஜிக்கு சந்த்ரிமா பட்டாச்சார்யா எழுதியுள்ள கடிதத்தில், ஜூன் 3 அன்று காளிகாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் எனக்கு வழங்கப்பட்ட அகிலஇந்தியதிரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் பதவியில் இருந்து நான் ராஜினமா செய்கிறேன். தற்போது நான் வகிக்கும் மற்ற அனைத்துப் பதவிகளில் இருந்தும் விலகுகிறேன்.

பல்வேறு வங்கிகளில் பராமரிக்கப்படும்கணக்குகள் தொடர்பாக டிஎம்சி மற்றும் அது சார்ந்த பிற அமைப்புகளின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர் என்றபொறுப்பில் இருந்தும் நான் விலகிக்கொள்கிறேன். இந்திய தேர்தல் ஆணையத்தின் முன் உங்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாகச் செயல்படுவதில் இருந்தும் நான் விலகுகிறேன்" என தெரிவித்து ள்ளார்.

பின்னர்செய்தியாளர்களிடம் பேசிய அவர், "யார் மீதும் எனக்கு எந்த குற்றச்சாட்டும் இல்லை. நம்பிக்கையைக் காப்பாற்றத்தவறிவிட்டேனோ என்ற வருத்தம் எனக்குள் இருக்கிறது. டிஎம்சி பவனை நான் ஒப்படைத்துவிட்டதாக கட்சியின் தலைவர் மம்தாபானர்ஜி என்னிடம் கூறினார். நான் மனவேதனை அடைந்துள்ளேன். பவனைஒப்படைக்கநான் யார்?" என தெரிவித்துள்ளார். கொல்கத்தாவின் கிழக்கு பெருநகர பைபாஸ் அருகேயுள்ள கட்சியின் தலைமையகமான டிஎம்சி பவனை, தாங்கள்தான் உண்மையான டிஎம்சி என கூறும் அதிருப்தி பிரிவினர் நேற்று கைப்பற்றினர்.

அப்போது கட்டிடத்துக்குள் இருந்த சந்த்ரிமா பட்டாச்சாரியா இதைத் தடுக்கவில்லை என அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. இது குறித்து மம்தா பானர்ஜி கேள்வி எழுப்பிய நிலையில் அவர் தனது அனைத்து பதவிகளையும் ராஜினாமா செய்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக சந்த்ரிமா பட்டாச்சார்யா, அதிருப்தி டிஎம்சியில் இணைவார் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. "இது குறித்த கேள்விக்கு, "இது குறித்து நான் கருத்து எதுவும் தெரிவிக்க மாட்டேன். காலம்தான் பதில் சொல்லும்" என சந்த்ரிமா பட்டாச்சார்யா தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 294 இடங்களில் பாஜக 208 இடங்களைக் கைப்பற்றியது. டிஎம்சி 80 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. இதையடுத்து, டிஎம்சியைச் சேர்ந்த 58 எம்எல்ஏக்கள் ரிதப்ரதா பானர்ஜி தலைமையில் அதிருப்தி அணியில் இணைந்தனர்.

அதிகாரப்பூர்வஎதிர்க்கட்சித் தலைவராக ரிதப்ரதாபானர்ஜி கடந்தஜூன் 3ம் தேதி அங்கீகரிக்கப்பட்டார். தொடர்ந்து கட்சியின் தலைவராக அரூப் ராய் தேர்வு செய்யப்பட்டார். டிஎம்சியின் மூத்த தலைவரான அரூப் ராய், மம்தா பானர்ஜி அரசில் அமைச்சராக இருந்தவர்.

# மும்பை, தானேவில் தொடரும் கனமழை: ஜூலை 6 வரை ரெட் அலர்ட்



மும்பை: மும்பை மற்றும் தானே மாவட்டங்களுக்கு ஜூலை 4,5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் அதி கனமழைக்கான 'ரெட் அலர்ட்' எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து, தானே மாவட்டம் மற்றும் கல்யாண்-டோம்பிவ்லி நகராட்சிப் பகுதிகளில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு இன்று (ஜூலை 4) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.மும்பை,தானே, பால்கர், ராய்காட், ரத்னகிரி மற்றும் சிந்துதுர்க் மாவட்டங்களுக்கு ஜூலை 4-ஆம் தேதிக்கான 'ரெட் அலர்ட்' எச்சரிக்கையை மும்பை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது. மேலும், ஜூலை 5 மற்றும் 6 ஆகிய தேதிகளிலும் இந்தக் கடலோர மாவட்டங்களுக்கு 'ரெட் அலர்ட்' எச்சரிக்கை தொடர்கிறது. இப்பகுதிகளில் பல இடங்களில் கனமழை முதல் மிக அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புனே, சதாரா மற்றும் நாசிக் ஆகிய மாவட்டங்களின் மலைப்பகுதிகளிலும் இன்று கனமழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்டோருக்கான அவசரக்கால உதவி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.ரெட்அலர்ட் எச்சரிக்கையை தொடர்ந்து, பொதுமக்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

# டிஜிட்டல் கைது கும்பல் துணிகரம்: பெங்களூரு முதியவரிடம் ரூ.3 கோடி மோசடி



பெங்களூரு: பெங்களூருவில் உள்ள ஜெய நகரை சேர்ந்தவர் மஞ்சுநாத் (74). இவரது வீட்டு தொலைபேசி எண்ணுக்கு கடந்த மார்ச் 9-ம் தேதி மூத்த தொலைத்தொடர்பு அதிகாரி எனக் கூறி, ரஞ்சிதா என்ற பெண் பேசியுள்ளார்.

அப்போது அவர், "உங்கள் தொலைபேசி எண் மற்றும் ஆதார் எண் ஹவாலா பண மோசடி, போதைப்பொருள் ஆகியவற்றுக்கு பயன்படுத்தப் பட்டுள்ளது. இதனால் உங்கள் மீதும் உங்களின் மனைவி மீதும் போதை கடத்தல் வழக்கு, மோசடி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று கூறியு ள்ளார்.

அதன்பின்னர் பெங்களூரு துணை ஆணையர் எனக் கூறி அசோக் என்பவர் பேசியுள்ளார். அவரும் மஞ்சுநாத்தை மிரட்டியுள்ளார். இதையடுத்து மர்ம கும்பலைச் சேர்ந்த 6 பேர் போலீஸ் அதிகாரி போல அவ்வப்போது தொடர்பு கொண்டு மிரட்டியுள்ளனர்.

பின்னர் மஞ்சுநாத் வங்கிக் கணக்கில் இருந்து ரூ.3.17 கோடியை மிரட்டி பெற்றுள்ளனர். மஞ்சுநாத் 22 தவணைகளில் ரூ.3 கோடியே 17 லட்சத்து 80 ஆயிரத்தை 11 வங்கி கணக்குகளுக்கு அனுப்பியுள்ளார்.

பணம் அனுப்பிய பிறகு எந்த தொலைபேசி அழைப்பும் வரவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த மஞ்சுநாத் நேற்று பெங்களூரு மாநகர தெற்கு மண்டல காவல் ஆணையரிடம் புகார் அளித்தார். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்த மத்திய குற்றப்பிரிவு காவல் துறையினர் மர்ம நபர்கள் 6 பேர் மீது 5 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# Umar Khalid, Sharjeel Imam's bail application rejected by Delhi court




A Delhi court has rejected the bail applications of student activists Umar Khalid and Sharjeel Imam in the 2020 Delhi riots larger conspiracy case. The order was passed by additional sessions judge Sameer Bajpai of Karkardooma courts. The Delhi police on Saturday opposed the bail applications moved by Umar Khalid and Sharjeel Imam in the 2020 Delhi riots larger conspiracy case, arguing that there were no changes in circumstances and that both of them occupied a senior and significant role in the conspiracy, distinct from rest of the co-accused persons, HT earlier reported. The submissions were made before additional sessions judge Sameer Bajpai of Karkardooma courts by Special Public Prosecutor (SPP) Madhukar Pandey. The court reserved its orders.

What Umar Khalid, Sharjeel Imam said in bail applications

Both Khalid and Imam in their bail applications moved last month, have cited a change in circumstances, highlighting the judgment pronounced on May 18 by a Supreme Court bench of justices BV Nagarathna and Ujjal Bhuyan while granting bail to Jammu and Kashmir resident Syed Iftikhar Andrabi in a narco-terror case being investigated by the National Investigation Agency (NIA).

The apex court had expressed "serious reservations" about the reasoning adopted earlier this year in the January 5 verdict, stating that it failed to correctly apply the binding principles laid down by a larger three-judge bench in Union of India Vs KA Najeeb (2021), which recognised that prolonged incarceration and delay in trial can override the statutory restrictions on bail under Section 43D(5) of the Unlawful Activities (Prevention) Act (UAPA).

# வாட்டி வதைக்கும் வெப்ப அலையால் ஐரோப்பாவில் இதுவரை 3,700 பேர் பலி



பாரிஸ்: ஐரோப்பிய நாடுகளில் வீசி வரும் கடும் வெப்ப அலை காரணமாக 3,700க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் கடந்த ஜூன் 20ம் தேதி முதல் ஜூன் 28ம் தேதி வரை கடுமையான வெப்ப அலை வீசியது. இந்த வரலாறு காணாத வெயிலின் தாக்கத்தால், நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் நூற்றுக்கணக்கான முதியவர்கள் உயிரிழந்த நிலையில், பிரான்சில் மட்டும் 45 வயதுக்கு மேற்பட்ட 2,000க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

இதன் காரணமாக இந்த மூன்று நாடுகளிலும் சேர்த்து ஒட்டுமொத்தமாக வெப்ப அலையினால் 3,700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. பூமியில் ஏற்பட்டு வரும் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றமே இந்த அதீத வெப்பத்திற்கு முக்கிய காரணம் என்று கூறியுள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், தற்போது கிடைத்துள்ள முதற்கட்ட தகவல்களை விட பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எச்சரித்துள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.